# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
# මැතිවරණ ප්‍රචණ්ඩත්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
# தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

**No:** 24/2, 28th Lane, Off Flower Road, Colombo 07
**Tel:** +94 11 2565304 – 6, 5552746, 5552749, **Fax:** +94 114714460
**E-mail:** cmev@cpalanka.org Website**:** www.cpalanka.org

## ஊவா மாகாணசபைத் தேர்தல்கள் 2014
## தேர்தல் தின செய்தி அறிக்கை இல.1

**செப்டெம்பர் 20, 2014, கொழும்பு, இலங்கை:** ஊவா மாகாண சபைத் தேர்தலிற்கான வாக்களிப்பு இன்று, 20 செப்டெம்பர், 2014 அன்று ஆரம்பமாகியது. இந்தத் தேர்தல், கடந்த இரண்டு வருடங்களில் நான்கு கட்டங்களாக நடந்து வரும் மாகாண சபைத் தேர்தல்களின் தற்போதைய சுற்றின் பிந்தியதானதாகும். மொனராகல தேர்தல் மாவட்டத்தின் 3 வாக்களிப்பு பிரிவுகள் மற்றும் பதுளை மாவட்டத்தின் 9 வாக்களிப்பு பிரிவுகளிலுமாக 834 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பதற்கு மொத்தமாக 942, 730 பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் பதியப்பட்டு உள்ளனர்.

**வாக்காளர் வரவு**

வாக்களிப்பு காலையில் 7.00 மணிக்கு ஆரம்பமாகியது. பதுளை மாவட்டத்தில் பி.ப 1.00 மணியளவில் வாக்காளர் வரவு 50% ஆகப் பதிவு செய்யப்பட்ட அதே வேளை மொனராகலை மாவட்டத்தில் அது 45% ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2009 இலான முன்னைய மாகாண சபைத் தேர்தலின் போது வாக்காளர் புரள்வானது மொனராகலை மற்றும் பதுளை மாவட்டங்களில் முறையே 68.69% மற்றும் 70.73% ஆகவும் இருந்துள்ளது.

**சம்பவங்கள்**

- **செப்டெம்பர் 20, 2014 அன்று, ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், பசறை, கோணாகலை மஹா வித்தியாலயம், கோணகல பொலிஸ் நிலையம்.** தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையத்தின் கண்காணிப்பாளர்கள் வாக்களிப்பு நிலையத்தின் முன்பாக வீதியில் இலக்கம் 18 க் காட்டும் எண்ணும் மற்றும் வெற்றிலைச் சின்னம் என்பன வீதியில் வரையப்பட்டிருப்பது பற்றி அறிவித்தனர். வரையப்பட்டிருந்த வாக்காளர் எண் மற்றும் தேர்தல் சின்னம் என்பவை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு (ஐ.ம.சு.கூ) இன் சின்னத்தையும் மற்றும் பசறைத் தேர்தல் தொகுதியின் ஏற்பாட்டாளரான திரு. வடிவேல் சுரேஷ் அவர்களின் விருப்பிலக்கத்தையும் சுட்டிக்காட்டியமை அவதானிக்கப்பட்டது (நிழற்படச் சான்று உள்ளது).

- **செப்டெம்பர் 20, 2014, ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டம், மொனராகலை, ஹொரம்புவ, மொனராகலை ஹொரம்புவ கனிட்டு விதுகல வாக்களிப்பு நிலையம்.** ஹொரம்புவ கனித்து விதுல வாக்களிப்பு நிலையத்திற்கு ND- 6622 எனும் பதிவிலக்கத்தைக் கொண்ட ஒரு பஸ் வண்டி காலை 7 மணியிலிருந்து வாக்காளர்களைப் போக்குவரத்துச் செய்வதற்காக உபயோகிப்பட்டதாக தே.வ.க.நி இன் களக் கண்காணிப்

பாளர்கள் அறிவித்தனர். மேலும் அந்த பஸ் வண்டி, மொனராகலை பிரதேசசபை ஊழியர்களின் போக்குவரத்துக்கும் உபயோகிக்கப்பட்டது. குறித்த பஸ் வண்டியில் ஐக்கிய மக்கள் சுதந்திலக் கூட்டமைப்பின் மொனராகலை மாவட்ட வேட்பாளர் சஷீந்திர ராஜபக்சவின் பெயர் முன்னிலையாகத் தெரியும் வண்ணம் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததையும் தே.வ.க.நி இன் களக் கண்காணிப்பாளர்கள் முறையிடுகின்றனர். இந்த சம்பவத்தின் விபரங்கள், குறித்த பஸ் வண்டியில் பிரயாணித்த, பிரதேச சபை ஊழியரொருவரால் உறுதிப்படுத்தப் பட்டது.

- **செப்டெம்பர் 20, 2014, ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், ஹப்புத்தளை, கிளன்னோர் தமிழ் கனிஷ்ட வித்தியாலய வாக்களிப்பு நிலையம்.** ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் (இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்) சேர்ந்த சுமார் 15 பேர்கள் கொண்ட ஆதரவாளர்கள் குழுவொன்று, வாக்காளர்களை அணுகி, ஐ.ம.சு.கூ தேர்தல் சின்னம் மற்றும் 2, 11 ,12 என இலக்கம் குறிக்கப்பட்ட ஒரு மாதிரி வாக்குச் சீட்டுக்கு அமைவாக வாக்கு அளிக்கும்படி, அவர்களை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதாக தே.வ.க.நி இன் களக் கண்காணிப்பாளர்கள் அறிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் வாக்களிப்பு நிலையத்திலிருந்து ஒரு 100 மீட்டர் சுற்று வட்டத்திற்குள்ளாக நிகழ்ந்ததென்றும் அக்குழுவினர் குறிப்பாகப் பெண் வாக்காளர்கள் மீது இது தொடர்பில் அழுத்தங்களைப் பிரயோகித்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

- **செப்டெம்பர் 20, 2014, ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், மஹியங்கனை, தெஹிகொல்ல மஹா வித்தியாலய வாக்களிப்பு நிலையம்.** தெஹிகொல்ல மஹா வித்தியாலய வாக்களிப்பு நிலையத்திலிருந்து 500 மீட்டர் சுற்று வட்டத்திற்குள் அமைந்துள்ள ஒரு வீதியில், நீல நிற டி- ஷேர்ட்கள் அணிந்த ஒரு குழுவினர் பொதுமக்களுக்கு சிற்றுண்டிகளை விநியோகித்ததாக தே.வ.க.நி இன் களக் கண்காணிப்பாளர்கள் முறையிட்டு உள்ளனர்.

- **செப்டெம்பர் 20, 2014, ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், பண்டாரவளை, பண்டாரைவளை தேர்தல் பிரிவு, வாக்களிப்பு நிலைய இலக்கங்கள் 60 மற்றும் 61.** வாக்காளர்கள் அட்டையைக் கொணடிருக்காத வாக்காளர்களை இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் திருப்பி அனுப்பியதாக தே.வ.க.நி களக் கண்காணிப்பாளர்கள் முறையிட்டுள்ளனர். நேரில் கண்ட சாட்களின்படி, காலை 11 மணி வரை, சுமார் 20 வாக்காளர்கள் வரை திருப்பி அனுப்பட்டதாக தே.வ.க.நி களக் கண்காணிப்பாளர்கள் கணிப்பிட்டுள்ளனர்.

- **செப்டெம்பர் 20, 2014, ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், பசறை, யூரி த் தோட்ட தமிழ் வித்தியாலய வாக்களிப்பு நிலையம்.** சுமார் பிற்பகல் 1.05 மணியளவில், வாக்களிப்பு நிலையம் நோக்கிச் சென்று கொண்டிருந்த வாக்காளர்கள் சிலரை, ஒரு குழுவினர் அணுகி, ஐ.ம.சு.கூ வேட்பாளர் திரு.வடிவேல் சுரேஷ் (இல.18) இற்கு வாக்களிக்குமாறு அழுத்தம் கொடுத்ததாக, தே.வ.க.நி களக் கண்காணிப்பாளர்கள் அறிவிக்கின்றனர். இந்தச் சம்பவமானது, குறித்த வாக்களிப்பு நிலையத்திலிருந்து 50 மீட்டர் சுற்று வட்டத்தினுள் நிகழ்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.
- **செப்டெம்பர் 20, 2014, ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், பண்டாரவளை, பண்டாரைவளை பொலிஸ் நிலையம்.** பண்டாரைவளைப் பொலிஸின் உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரியினால் வெளியிடப்பட்ட பொலிஸ் செய்தியில், காலை 10.20 அளவில், பண்டாரைவளை நகர பிதா திரு.சமிந்த விஜயசிறி மற்றும் அவரது ஐந்து ஆதரவாளர்களுடன் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் அச்சுறுத்தப்பட்டும் மற்றும் தாக்கப்படுவது தொடர்பில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்வதற்காக பொலிஸ் நிலையத்திற்கு விஜயம் செய்ததாகக் குறிப்பிட்டது. காலை சுமார் 10.40 அளவில், பண்டாரவளை பிரதேச சபையின் ஐ.ம.சு.கூ உறுப்பினர் திரு. ஹீன்கெந்த, மற்றும் வர்த்தகப் பிரதி அமைச்சர் மற்றும் அவரது ஆதரவாளர்கள் (அவர்கள் திரு.ஹீன்கெந்த வந்த சிறிது நேரத்திற்குள்

வந்தனர்) ஆகியோர் பொலிஸ நிலையத்திற்குள் நுழைந்ததுடன் பண்டாரவளை நகரபிதா மற்றும் அவரது ஆதரவாளர்களுடன் வாய்த்தர்க்கத்திலும் பிறகு கைகலப்பிலும் ஈடுபட்டுள்ளனர்.

- பண்டாரவளை நகர பிதா தியத்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் வாய்த்தர்க்கத்தின் ஒரு விளைவாக உராய்ஞ்சல் காயங்களுக்குள்ளாகியதாகவும் தே.வ.க.நி களக் கண்காணிப்பாளர்கள் அறிவிக்கின்றனர். பின்னர் அவர், பதுனை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்படபட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் (தே.வ.க.நி), தேர்தல் வன்முறைகள் தொடர்பான சம்பவங்களைக் கண்காணிப்பதற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் ஒரு சுயாதீன மற்றும் கட்சிச் சார்பற்ற ஸ்தாபனமாக அரசியல் வன்முறைகளுக்கெதிரான கூட்டமைப்பு என்பவற்றினால் 1997 இல் உருவாக்கப்பட்டது. தற்போது, தே.வ.க.நி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் இன்போர்ம் மணித உரிமைகள் ஆவண நிலையம் என்பவற்றால் உருவகிக்கப்படுகிறது.

**எங்களது தொடர்பு விபரங்கள்:**

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் (தே.வ.க.நி)
இல. 24/2, 28ஆவது ஒழுங்கை,
ஒஃப் பிளவர் வீதி,
கொழும்பு 3.
தொலைபேசி:: 0112565304-6 ளூ 0115552749
தொலைநகல்: 0114714460
மின்னஞ்சல்: cmev@cpalanka.org

கருத்துக்கள் மற்றும் தகவல்களுக்காக பின்வரும் நபர்களை தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்:

கலாநிதி.பாக்கியசோதி சரவணமுத்து
இணை அமைப்பாளர் - தே.வ.க.நி
0112301634 (நேரடி)

திரு. மஞ்சுளா கஜநாயக்க
ஒருங்கிணைப்பாளர்
0115552749/0772298565

திரு.மணிமாறன்
கள ஒருங்கிணைப்பாளர்
0115552749/077247608